# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 5 | ஏப்ரல் 1992 | இதழ் 4



வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15—8-30...மாதவக்காடு வேத ஆராய்ச்சி வகுப்பு

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு

வெள்ளி : மாலை 7-00—8-30...ஜெப ஆராதனை (2-ம் வெள்ளி மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 முதல் இரவு 9-00 மணிவரை)

சனி : மக்கள் சந்திப்பு

## தலைப்புச் செய்திகள்


1. ஆசிரியவுரை 1—2
2. இயேசுகிறிஸ்துவே சரியான பதில் 3—7
3. நானும் என்வீட்டாருமே வென்றால் 8—10
4. கர்த்தரின் பந்தியைக் களங்கப்படுத்தாதீர் 11—12
5. பெற்றோர்களே, உஷார்! 13—17
6. யாருக்குத் தெரியும்? 18—19
7. கிறிஸ்து கற்பித்த சமத்துவம் காப்போம்! 20—23
8. கேளுங்கள்! சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! 24—27
9. நேர்மையே உன் விலை என்ன? 28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity.

Vol 5. April—1992 Issue 4


**ஆசிரியவுரை**

பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய வாசகப் பெரு மக்களுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய பெயரால் வாழ்த்துக்கள்.

எதிர்வரும் மே மாதம் 23ம் நாள் சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை சென்னை புரசவாக்கத்தில் உள்ள E.L.M. பெர்ரீஸியஸ் மேல் நிலைப் பள்ளி கலையரங்கத்தில் (auditorium) நமது திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கத்தை நடத்தலாம் என்று அதற்கென கூட்டப்பட்ட ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டுள்ளது என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

22.5.92 இரவு வெளியூர்களிலிருந்து வருபவர்கள் தங்குவதற்கு வசதியாக பள்ளி வளாகத்திலேயே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதே வளாகத்தில் பெண்களுக்கு தனிவசதியும் செய்யப்பட்டிருக்கிறது.

நாட்டின் பல்வேறு பகுதியிலிருந்து வருகிற சிறப்புச் செய்தியாளர்கள் முற்பகல் முழுவதும் (9.30-1.00) புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தைப் பற்றி தெளிவான கருத்துக் களை எடுத்து வைத்து உரை நிகழ்த்துவார்கள். மதிய உணவுக்குப் பிறகு பிற்பகல் கூட்டத்தில் வாசகர்களின் கேள்விகள், சந்தேகங்கள் ஆகியவற்றுக்குப் பதில் கூறு-தலும், கலந்துரையாடல்களும் இருக்கும்.

காலம் குறைவாக இருப்பதால் கருத்துக்கூற விரும்பு கிற அனைத்துப் பேருக்கும் வாய்ப்புத் தரஇயலாது என்பதால் பேச விரும்புகிறவர்கள் தயவு செய்து முன் கூட்டியே எங்களுக்கு எழுதி உறுதி செய்து கொள்ளவும். வாய்ப்புக் கிடைக்காதவர்கள் தங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக கொடுத்தால் அடுத்து வரும் திருமறை ஆசான் இதழ்களில் அவ்வுரைகளை வெளியிட முயற்சிப் போம்.

கலந்து கொள்ளுகிற அனைத்துப் பேருக்கும் மதிய உணவு அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உணவுக் கட்டணத்தைத் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வசூலிக்காமல் விருப்பட்டவர்கள் தன்னார்வத்தோடு உவந்தளிக்கும் அன்புக் காணிக்கையைப் பயன்படுத்தலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே கர்த்தரால் ஏவப்பட்டவர்கள் இதற்கான காணிக்கைகளை விழாக்குழுவின் கன்வீனர் அவர்களுக்கோ திருமறை ஆசான் ஆசிரியருக்கோ M. O மூலமாகவோ D.D மூலமாகவோ, அல்லது நேரில் கொடுத்தோ ஆதரிக்க வேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

சிறப்பு பேச்சாளர்கள், கருத்தரங்கம் நடைபெறவிருக்கும் இடத்துக்கு வந்து சேர்வதற்கான வழித்தடங்கள், மற்றும் நிகழ்முறைகள் ஆகியவற்றுக்கு மே மாத திருமறை ஆசான் இதழ் காண்க. கருத்தரங்க வெற்றிக்காக தனியாகவும், குழுவாகவும், சபையாகவும் ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

அன்புடன்
இறைப்பணியில் உங்கள் சகோதரன்
E.Z: **செல்வநாயகம்**

**தொடர்பு முகவரிகள் :**


| R. சித்தார்த்தன் | ஸ்டீபன் எஸ்றா | E. Z. செல்வநாயகம் |
| --- | --- | --- |
| (கன்வீனர்) | (பொருளாளர்) | இதழ் ஆசிரியர் |
| No 3, ஹரிகிருஷ்ணா ரோடு | 88, சாலை சந்து ராபர்ட்சன் பேட்டை | 2, மணல்மேடு வீதி ஈரோடு 638002 |
| நந்தம் பாக்கம் ரோடு சென்னை 6□0089 | சென்னை 600 028 | |

# இயேசுகிறிஸ்துவே சரியான பதில்

நாம் வாழ்க்கையில் பல்வேறு விதமான பிரச்னைகளைச் சந்திக்கிறோம். அவைகளுக்கு விடை காண பல்வேறு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. காதுவலி போய் திருகுவலி வந்தது என்பது போல் ஒரு பிரச்னையைச் சமாளிக்க ஏதாவது செய்தால் அது வேறொரு பிரச்னையாக உருமாறுகிறதே யல்லாமல் தீர்ந்தபாடில்லை. ஏனெனில் நாம் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ள நாடும் நபர்களும் வழிகளும் தவறானவைகளாக இருக்கின்றன.

அதற்கு ஒரு வழி உண்டு. உங்களுடைய கேள்விகள், பிரச்னைகள், தேவைகள் எதுவாக இருந்தாலும் நீங்கள் இயேசுகிறிஸ்துவிடம் சொல்லுங்கள். அவர் அவைகளையெல்லாம் சுமுகமான முறையில் தீர்த்து உங்களுக்கு ஆறுதலையும், சமாதானத்தையும் அருளுவார் என்று உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன். ஒரு வேளை நான் சொல்வது உங்களுக்கு உடன்பாடு இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால் அதுவே உண்மை. அவர் ஒருவருக்கே உங்களுடைய சுபாவம், பலம், பலவீனம், உங்களுக்கு ஏற்படும் பிரச்னைகளின் தன்மைகள், உங்களுடைய சிந்தனையோட்டம், உங்கள் நோக்கங்கள், உங்களுடைய பாவ இயல்புகள் எல்லாம் தெரியும். ஏனெனில் அவர் தான் உங்களைப் படைத்தவர். உங்களைப் போலவே பிரச்னைகளுக்குள் சிக்கித் தவிக்கும் ஒரு மனிதன் உங்களுக்கு உதவக் கூடுமானால் இயேசுகிறிஸ்துவுக்கு ஏன் முடியாது? அவர் அப்படிச் செய்வதற்கு ஓர் வாய்ப்புக் கொடுத்துப் பாருங்கள். அவர் உங்களை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை எண்ணிப் பாருங்கள். உங்களுக்காகத் தன் இன்னுயிரையே தத்தம் செய்தாரே! ஏன்? நீங்கள் இந்த உலகத்தின் இடர்பாடுகளுக்குத் தப்பி மறுமையில் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்குத் தானே!

முதலாவது ஒன்றை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நமக்கு ஏற்படும் பலவிதமான பிரச்னைகளையும் சோதனைகளையும் நம்மைப் போல உள்ள சகமனிதனிடம் சொல்லுவதினால் என்ன பயன் விளையும்? ஆனால் இயேசுகிறிஸ்துவிடம் சொன்னால் அவர் அவைகளைத் தீர்த்து வைப்பார். ''வானங்களின் வழியாய் பரலோகத்துக்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால் நாம் பண்ணின அறிக்கையை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கக் கடவோம்.

நம்முடைய பாவங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும், நம்மைப் போல சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.''

''ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாகக் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம் என்று சொல்லப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்'' (எபி 4:14-16)

மேலும் அப்போஸ்தலன் பவுல் கூட ''மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார், உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு அவர் இடங்கொடாமல் சோதனையைத் தாங்கத் தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.'' என்று ஆறுதல் கூறுகிறார் (1 கொரி 10:13) மனிதர்மேல் அவருக்கு இருக்கும் அக்கரையையும் கரிசனையையும் குறித்து அப்போஸ்தலர் கூறும்போது, ''கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத் தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்'' என்கிறார் (2 பேது 2:9)

மேலே சொன்ன உறுதிமொழிகளையெல்லாம் அவர் காப்பாற்றுவாரா? என்று சிலர் சந்தேகப்படக்கூடும், அதைக் குறித்துப் பேதுரு **''தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லோருமே மனந் திரும்ப வேண்டுமென்று நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்''** என்று தாமதத்திற்கான காரணத்தை விளக்குகிறார் (2 பேதுரு 3:9) மற்றபடி அவர் வாக்குக் கொடுத்ததை நிறைவேற்ற முடியாமல் தவிக்கிறார் என்று எண்ணிவிடக் கூடாது.

வேகமாக மாறி வரும் நாகரீக உலகத்தில் மனிதர்களுக்குப் பற்றாக்குறை என்பது சகஜமாகி விட்டது. சமுதாயம் மதிக்கத் தக்கவாறு வாழ்ந்தாக வேண்டும் என்பது காலத்தின் கட்டாயம் ஆனால் அதற்கேற்ற வருமானம் இல்லை என்பதே பலருடைய பல்லவி. எதை எதை எப்படி எந்த அளவு செய்யவேண்டும் என்ற ஞானம் இல்லாமல் போனால் வாழ்க்கையில் தோல்வியுற நேரிடும். அதை முறைப்படுத்தி சிக்கலில்லாமல் வாழ்க்கை வாகனத்தை ஒழுங்காக ஓட்டிச் செல்வதற்கும்கூட அவருடைய உதவி தேவை.

ஆகவே நாம் அவரை நோக்கிப் பார்த்து, அவர் சொற்கேட்டு அவரை விசுவாசித்தால் எந்தவிதமான பிரச்னைகளையும் சமாளிக்க அவர் வழி காட்டுவார். ஆனால் அவர் கூறுகிற அறிவுரைகளை அப்படியே கடைபிடிக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு மட்டுமே அவர் உதவுகிறார். பொருள் சேர்ப்பதைப் பற்றி அவருடைய அறிவுரையைக் கேளுங்கள். ''பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும், இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள் அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத்திருடுவதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் (மத் 6: 19-21) வாழ்க்கையின் தேவைகளைப் பற்றி வீணாகக் கவலைப்படுகிறவர்களுக்கு அவர் கொடுக்கிற அறிவுரையைக் கீழே வாசியுங்கள் : ''ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப் படாதிருங்கள் என்று உங்களுக்குச் சொல்கிறேன்; ஆகாரத்தைப் பார்க்கிலும் ஜீவனும், உடையைப் பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா?

''ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை; அறுப்பதுமில்லை; களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?''

''கவலைப்படுகிறதினால் உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?''

''உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளர்கிறது என்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை. என்றாலும் சாலமோன் முதலாய் தன் சரீர மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.''

''அற்ப விசுவாசிகளே, இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப்புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா''

''ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று கவலைப்படாதிருங்கள்.''

''இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.

முதலாவது தேவனுடைய இராஜ்ஜியத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.''

''ஆகையால் நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள் நாளையதினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதின்தின்பாடு போதும்'' (மத் 6: 25-34)

மேலே சொல்லப்பட்டுள்ள அறிவுரைகள் உங்களுக்குச் சரி என்று படுகிறதா? சரி என்று படாவிட்டால் உங்கள் பிரச்னைகள் தீர்வதற்கு மாற்றுவழி இல்லை என்பதை திட்டமாய் அறிந்து கொள்ளுங்கள். ஒரு வேளை நீங்கள் உங்கள் சொந்த ஞானத்தைக் கொண்டும் இன்னும் பிற வழிகளிலேயும் உங்கள் வாழ்க்கைத் தேவைகளை பெற்றுக் கொள்வதில் வெற்றி பெறுகிறீர்கள் என்றே கூட வைத்துக் கொள்ளுங்கள். அது நிரந்தரமான தீர்வு ஆகாது. ஏனெனில் நீங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகள் உங்களைத் திருப்திப்படுத்தாது. தேவைப்பட்டியல் நீண்டு கொண்டே போகும். பேராசை உங்களை ஆட்கொள்ளும். அதற்கு ஒரே பரிகாரம் அவருடைய வாழ்க்கைச் சட்டங்களை ஏற்றுக்கொண்டு, அவருடைய சித்தத்துக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக் கொடுத்தால் தான் அவர் உங்களுக்கு ஒத்தாசை செய்து உங்களுக்கு சமாதானமான வாழ்க்கையைக் கட்டளையிடுவார்.

சிலருக்கு இருக்கிற இன்னொரு பிரச்னை: மற்றவர்களோடு ஒத்துப் போகமுடியாத சுபாவம். தாங்கள் சொல்வதைத் தான் மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று எண்ணி மற்றவர்களுடைய கருத்துக்களை மதியாமல் நடந்து கொள்வது தான். அந்தக் குறையை நிவர்த்தி செய்யவும் இயேசுகிறிஸ்துவிடம் மருந்து உண்டு. **''மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்''** (மத் 7:12) என்ற சூத்திரத்தை உங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிப்பீர்களானால் அந்தக் குறை இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோகும். இவைகளை நாம் வீட்டிலும், அலுவலகங்களிலும் இன்னும் நாம் தொடர்பு கொண்டிருக்கிற அனைவரிடமும் கடைப்பிடிப்போமானால் அநேக பிரச்னைகள் தானாகவே தீர்ந்துவிடும். இன்னும் மற்றவர்களை நியாயம் தீர்க்கக்கூடாது என்றும் (மத் 7:1) நாம் செய்கிற பாவங்களையும் தவறுகளையும்கர்த்தர் மன்னிக்க வேண்டும் என்றால் நாமும்

கூட மற்றவர்களுடைய தவறுகளை மன்னிக்க வேண்டும் என்றும் கூறுகிறார். (மத் 6:14,15)

மனிதனுக்கு இருக்கிற பிரச்னைகளிலே மிகவும் மோசமானது பாவம். அதுதான் எல்லாத் துன்பங்களுக்கும், வேதனைகளுக்கும் ஊற்றுக்கண். இதைத் தீர்த்துக் கொள்வதற்கு மனிதன் தன்னையோ மற்றவர்களையோ இரட்சித்துக் கொள்ள திராணியில்லாத மனிதர்களிடத்தில் போய் பாவத்தைப் போக்கப் பரிகாரம் தேடுவது மடைமை; இந்த அறியாமையைப் பயன்படுத்தி சில சுயநலவாதிகள் அப்போஸ்தலருடைய உபதேசங்களைத் திரித்து, தொழுகை முறைகளை மாற்றி, சபையைத் துண்டாடி கர்த்தருக்குப் பிரியமில்லாத நடைமுறைகளைக் கிறிஸ்துவத்துக்குள் புகுத்தி விட்டனர். அதுதான் உண்மை என்று பலர் நம்பி மோசம் போய்க் கொண்டிருக்கின்றனர். இரட்சிக்கப்படுவதற்கு குறுக்குவழி இருக்கிறது என்று கூறி மக்களைத் திசை திருப்புகின்றனர்.

உண்மையாகவே இரட்சிக்கப்பட வேண்டும் என்ற மனவேட்கை இருக்குமானால் கிறிஸ்து சொல்வதைக் கேட்டு அதன்படி செய்யுங்கள் ''விசுவாசமுள்ளவனாக ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (மாற்கு 16:16) அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து திருமுழுக்குப் பெற்றுக் கொண்டால் அவர் உங்களை இரட்சித்து சபையில் சேர்த்துக் கொள்கிறார். (அப். 2:47) நீங்கள் அவருடைய பிள்ளையாக மாறுகிறீர்கள் (கலா 3:26,27) அதுமுதல் நீங்கள் இயேசுகிறிஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாக வாழ்ந்தால், கர்த்தர் தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களுக்குக் கொடுப்பேன் என்று வாக்குக் கொடுத்தபடி நித்திய ஜீவனை அளிக்கிறார், மற்றபடி நீங்களாகவோ. மற்ற மனிதர்கள் மூலமாகவோ, அவன் எவ்வளவு பெரியவனாகயிருந்தாலும், மோட்ச இராஜ்ஜியத்துக்குள் பிரவேசிக்க முடியாது.

மனிதருக்கு இருக்கும் பல பிரச்னைகளில் மாதிரிக்கு சிலவற்றை உங்கள் முன் வைத்தோம். ஆனால் உங்களை அதிகமாக அழுத்திக் கொண்டிருக்கிற பிரச்னை எது என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால் அது எப்படிப்பட்டதாயிருந்தாலும் எவ்வளவு பெரியவைகளாக இருந்தாலும் கர்த்தரிடம் அதற்குப் பரிகாரம் உண்டு (ஏசாயா 1:18-20) இயேசுகிறிஸ்து உங்கள்மேல் அக்கறை கொண்டு சொல்லும் புத்திமதிகளைக் கவனித்து அதில் நடவுங்கள் **கேளுங்கள் கொடுக்கப்படும்; தேடுங்கள் கண்டடைவீர்கள்; தட்டுங்கள் திறக்கப்படும் ஏனென்றால் கேட்கிற எவனும் பெற்றுக் கொள்கிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்''** மத் (7:7,8)

நினைவிருக்கட்டும், உங்கள் பிரச்னை எதுவானாலும் **கிறிஸ்துவே பதில்.**

**J.C. சோட்**

# நானும் என் வீட்டாருமோ வென்றால்....

இஸ்ரவேல் மக்கள் கர்த்தரை மறந்து தன் தன் மனம் போன போக்கில் போய்க் கொண்டிருந்த சூழ்நிலையில் யோசுவா தன்னுடைய குடும்பத்தாரின் விசுவாச உறுதிக்கு உத்திரவாதம் அளித்து **''நானும் என்வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம்''** என்றான். (யோ 24:75) நோவா கூட உலக்மெல்லாம் தன் செயல்முறைகளை இகழ்ந்தும் பழித்தும் கூறியும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் தன் குடும்பத்தாரை விசுவாசத்தி லிருந்து வழுவி போகா வண்ணம் காத்துக் கொண்டான். (1பேது 3:20, 2பேது 2:5) ஆனால் தற்காலத்தில் குடும்பமாக ஆராதனையில் கலந்து கொள்ளாமல் ஆண்கள் மட்டும் வந்து போவது கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்படும் தவறான பழக்க வழக்கங்களில் ஒன்றாக இருக்கிறது. அதுவும் ஆராதனைக் கூடங்கள் சற்று தூரமாக இருந்து விட்டால் அதையே ஒரு காரணமாக்கி விடுவர். போதிய பஸ் வசதி இல்லை - குழந்தைகளை இழுத்துக் கொண்டு போக்குவரத்து நெரிசலில் அவைகளை ஏற்றி இறக்கி கொண்டு வந்து சேர்வதற்குள் பெரும் பாடாய்ப் போய் விடுகிறது.— அப்படித் தான் அவர்களைக் கொண்டு வந்து சேர்த்தாலும் என்ன, அவர்களுக்கு பிரசங்கங்களும் இதர சபை நடவடிக்கைகளும் விளங்கவா போகிறது? - ஆகவேதான் அவர் மட்டும் வந்து விட்டு வரட்டும். பிள்ளைகள் பெரிதான பிறகு நாங்கள் வருகிறோம் என்று தாய்மார்களும் தப்பித்துக் கொள்கின்றனர்.

இந்த மாதிரி பழக்கத்தில் ஏற்படும் விளைவுகள் என்னவென்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (1) ஆண்கள் மட்டும் போய் ஆராதித்து வருவதினால் முழுக் குடும்பமும் கிறிஸ்துவுக்குள் வளர முடியுமா? (2) பிள்ளைகளுடைய வேத அறிவு வளர்ச்சியடையுமா? (3) அவர்கள் சபை நடவடிக்கைகளில் பங்கு கொள்ளாமல் அவர்களுடைய விசுவாசம் உறுதியாக இருக்குமா? (4) அங்கே ஆராதனைக்காக கூடிவரும் மற்ற சகோதர சகோதரிகளை மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் பார்க்காமலே இருந்தால் அவர்கள் மீது இவர்களுக்கு அன்பு சுரக்குமா? (5) ஒற்றுமை உணர்வு உருவாகுமா? (6) சிறு பிள்ளைகளுக்கான ஞாயிறு பள்ளி ஒழுங்காக நடந்து அவர்கள் வேத அறிவைப் பெற்றுக் கொள்ள முடியுமா? (7) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? சிறு பிள்ளைகளாக இருக்கும் பொழுது அவர்களுக்கு நற்பழக்கங்களையும், கர்த்தருக்கு பயப்படும் பயத்தையும் கற்றுத் தராமல் போனால் வளர்ந்து, ஆள் ஆகும் போது அவர்களை நல்வழிப்படுத்துவது சிரமம் அல்லவா?

சகோதரிகளே! கணவன் மாத்திரம் ஆராதனையில் கலந்து கொண்டு நாமும்; குழந்தைகளும், வீட்டிலேயே இருந்து விட்டால் நாம் விசுவாசத்தை விட்டு வழுவி விழுந்து போக மாட்டோமா? இந்தத் தலைமுறைக் கிறிஸ்தவர்கள் விசுவாசத்தில் உறுதியாக இருந்தால் அல்லவா, நமக்கு பின் வருகிற பிற்காலச் சந்ததிகள் விசுவாசத்தில் வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும்? நாம் நம்முடைய குழந்தைகள் விசுவாசத்தில் வளர்வதற்கேற்ற சூழலை அமைத்துத் தரா விட்டால் அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் பலவீனமாகி விடுவார்களே! இந்த அபாயங்களை நாம் உணர்ந்து அவர்கள் விசுவாச ஜீவியத்தில் வளர்வதற்குத் தேவையான அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

பெண்களுக்கும் ஆத்துமா உண்டு. ஆகவே அவர்களும் தேவனைத் தொழுவது அவசியம். ஆசிர்வாதத்தை பார்சலில் அனுப்ப முடியாது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய வாயிலிருந்து வரும் வார்த்தைகளைக் கேட்டு அவர்கள் வழி நடத்தப்படவும், உற்சாகப்படுத்தப்படவும் வேண்டும். அவர்கள் சபையில் உள்ள மற்ற சகோதரிகளை நேசிக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். அப்பொழுது தான் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளமுடியும். சபையால் நடத்தப்படும் பல்வேறு செயல் திட்டங்களில் தன்னையும் இணைத்துக் கொண்டு, ஆவிக்குரிய வளர்ச்சி பெற்று தேவனுக்குப் பிரியமாய் நடக்க வேண்டும்.

ஒரு வேளை பெரியவர்களைப் போல குழந்தைகள் சொல்லப்படுகிற காரியங்களைத் தெளிவாக புரிந்து கொள்ளாமல் போகலாம். அதற்காகத் தானே ஞாயிறு பள்ளி, அதில் அவர்களுடைய வயதுக்கும், மனப்பக்குவத்துக்கும் ஏற்ற முறையில் தேவனுடைய வார்த்தைகளைக் கற்பிக்கலாமே! அதனால் தான் தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை ஒவ்வொரு கூட்டத்திற்கும் அழைத்துக் கொண்டு வரவேண்டும். என்று வலியுறுத்துகிறோம். அப்படிச் செய்தால் அவர்கள் நன்கு பயிற்சி பெற்று கர்த்தருடைய வசன அறிவில் வளர்ச்சியடைவார்கள். பெண்களும், குழந்தைகளும் பொதுவாக ஆராதனைக் கூட்டங்களுக்கு ஒழுங்காக வருவதோடு மட்டுமல்லாது, வீட்டிலேயும் பிள்ளைகளுக்கு காலை, மாலை ஜெபங்கள் வேதபாடப் பயிற்சி ஆகியவைகளை ஒழுங்காகக் கற்றுத் தர வேண்டும். ஏனெனில் வாரத்தில் ஒரு நாள் இரண்டொரு மணி நேரம் ஆராதனையில் நாம் கற்றுக்கொள்கிற கொஞ்ச காரியம் வாரம் ஏழு நாட்கள் முழுவதுக்கும் போதாது. எனவே வீட்டிலும் நான்தோறும் சிறிது நேரத்தை ஒதுக்கி குழந்தைகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களுடைய விசுவாச ஜீவன் பலப்படும்.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்முடைய சிறார்களுக்கு நித்திய ஜீவனை அடைவதற்கான காரியங்களில் பயிற்சி கொடுக்கத் தவறி விட்டு, சொற்ப காலத்தில் அழிந்துபோகிற சரீரப் பிரகாரமான நன்மைகளைத் தரும் உயர்ந்த கல்வி, சேர்த்து வைக்கும் சொத்து கட்டி வைக்கும் பங்களாக்கள், தூசும், குப்பையும் தான். அவைகள் அவர்களுக்கு சிறப்பையும், ஆசிர்வாதத்தையும் சமாதானத்தையும் பெற்றுத் தராது.'' **ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல''** என்றும் *(லூக் 12 : 15)* **ஒருவன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப் படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?** *(மத் 16;26)* என்றும் திருமறை கூறும் பேருண்மைகளைச் சிந்தித்து பார்ப்பீர்.

**பெட்டி பர்ட்டன் சோட்**

## ஏவாள்

இத்தரணியில் படைக்கப்பட்ட முதல் 'தாய்க் குலம்' ஏவாள். இச்சையடக்க மற்ற அவளது விநோ-தப் பிரியத்தால் பாவம் ஆதாம் வழியாக உற்பத்தி-யாகி, அதன் தீய விளைவை மனிதக்குலம் இன்றும் அனுபவிக்கிறது.

சகோதரிகளே! கீழ்ப்படிதலற்ற விநோதப் பிரி-யத்தால் நம் குடும்பங்களில் நாம் விதைத்திடும் வினை-கள் எத்தனை !

**– சகோதரி போர்ஜியா**

# கர்த்தரின் பந்தியைக் களங்கப்படுத்தாதீர்

இயேசு, ''அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அதை பிட்டு நீங்கள் வாங்கி புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூறும்படி இதைச் செய்யுங்கள் . . . போஜனம் பண்ணின பின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்த பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம் பண்ணும் போதெல்லாம் 'என்னை நினைவு கூரும்படி இதை செய்யுங்கள் என்றார்''

(1 கொரி 11 ;23,25)

இயேசு கூறிய பிரகாரம் கர்த்தரின் பந்தியைக் கடைபிடிக்காமல் பலர் தங்களுடைய விருப்பத்திற்கேற்றவாறு சிதைத்து சின்னாபின்னப்படுத்தியிருப்பதை இன்று நாம் காணமுடிகிறது.

❋ வாரத்தின் முதல் நாளிலே கர்த்தரின் பந்தியை அநுசரிக்க நமக்குப் போதிக்கப்பட்டுள்ளது. (அப் 20;7) ஆதிகிறிஸ்தவர்களும் அவ்வண்ணமே ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கூடி கர்த்தரின் பந்தியில் கலந்து கொண்டனர்; பிற நாட்களில் அல்ல.

❋ கர்த்தரின் பந்திக்குக் கட்டணம் வசூலிக்க அனுமதி இல்லை தேவ பக்தியை ஆதாயத் தொழில் என்று எண்ணுவோர் கண்டனத்துக்குறியவர்கள் (1 தீமோ 6:5).

❋ மனிதனிடம் 'பாவ மன்னிப்பு' பெற்ற பின்னரே கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ள வேண்டும் என்று சட்டம் இல்லை **''எந்த மனிதனும் தன்னைத் தானே சோதித்தறிந்து இந்த அப்பத்தில் புசித்து, இந்த பாத்திரத்தில் பானம் பண்ணக் கடவன்''** (கொரி 11:28)

❋ இது கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூரும்படியான பந்தி (1 கொரி 11:25) கிறிஸ்துவே அப்பத்திலும் இரசத்திலும் ''உயிரோடு இறங்கி வருவதல்ல.

❋ இது ஒரு ஐக்கியம் (1 கொரி 10:16) கிறிஸ்துவின் சரீரத்திலும் இரத்தத்திலும் கிறிஸ்தவர்கள் ஐக்கியப்படும் பந்தி.

❋ இது ஒரு பலியோ, பூசையோ அல்ல.

பலருடைய பாவங்களை சுமக்க கிறிஸ்து **ஒரே ஒரு தடவை** மட்டும் பலியிடப்பட்டார். (எபி 9;28).

❋ அப்பமும் திராட்சை இரசமும் மட்டுமே பந்திக்கான பொருட்கள், கேக் ஆப்பிள் ஜூஸ் தண்ணீர் அல்லது வேறு எந்தப் பொருளையும் கர்த்தரின் பந்தியில் பயன்படுத்தலாகாது (மத் 26:26-29).

❋ ஒவ்வொரு கிறிஸ்தவனும் அப்பம் இரசம் ஆகிய **இரண்டிலும்** பங்கு கொள்ளவேண்டும். ''நீங்கள் எல்லோரும் இதில் பானம் பண்ணுங்கள்'' (மத் 26:27). 15ம் நூற்றாண்டிலே தங்கள் அங்கத்தினர்களுக்கு அப்பம் மட்டும் போதும் என கத்தோலிக்க மதம் சட்டம் இயற்றியது.

❋ கர்த்தரின் பந்தி, கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் நினைவு கூறுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இயேசுவின் சரீரமாகவும் இரத்தமாகவும் அவை மாறுவதில்லை. கி.பி. 1215ல் இத் தவறான நம்பிக்கை இலத்தீன் சபையால் புகுத்தப்பட்டது.

❋ மரித்தோரின் இரட்சிப்புக்காக மற்றவர்கள் பங்கு பெறும் பந்தி அல்ல இது.

❋ 'குருக்கள்' என்றழைக்கப்படும் மதத்தலைவர்கள் மட்டுமே கர்த்தரின் பந்தியை நடத்த வேண்டும் என வேதாகமம் போதிக்கவில்லை.

❋ பந்தியில் கலந்து கொள்ளுமுன் உபவாசம் இருக்க வேண்டும் என்பது வேதாகமச் சட்டம் அல்ல.

❋ 'குரு'விடம் பாவ மன்னிப்பு பெற்ற பின்னரே கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ள முடியும் என்பது வேதாகமச் சட்டம் அல்ல.

❋ ''ஐக்கியம்'' (1 கொரி 10:16) என்றும், ''கர்த்தரின் பந்தி'' (1 கொரி 10:21) என்றும், ''அப்பம் பிட்குதல்'' (அப் 1:42) என்றும் அழைக்கப்பட்டதே தவிர, ஒரு போதும் ''திருப்பலி'' என்றோ ''பூசை என்றோ அழைக்கப்படவில்லை.

கர்த்தருடைய சட்டங்களையும் எளிய போதனைகளையும் விட்டு விட்டு, பிறக்கும் குழந்தைக்கு ஞானஸ்நானம் தொடங்கி மரிக்கும் மனிதனுக்கு ''அவஸ்தை பூசுதல்'' என்ற சடங்கு வரை மாறுபாடான போதனைகளையும், சட்டங்களையும் திணித்த மனிதன், கர்த்தருடைய பந்தியையும் களங்கப்படுத்தி வைத்திருக்கிறான்.

**''நான் போன பின்பு மந்தையைத் தப்ப விடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்**(அப் 20:29) என இயேசு அன்று எச்சரித்தது இன்று நாம்காணும் இந்தக் கொடியவர்களைத்தனோ!

**எஸ். எஸ். ராஜன்**

# பெற்றோர்களே, உஷார்!

தாவீது அரசனை அறியாத கிறிஸ்தவர்கள் இருக்கமுடியாது. தேவன் அவனுக்குக் கொடுத்திருந்த தாலந்துகள் ஏராளம்.

அவன் அழகான தோற்றமுடையவன் 1 சாமு 16:12. இசைக் கருவிகள் இயக்குவதில் வல்லவன், பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரிய சமர்த்தன், சவுந்தரியமுள்ளவன், கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றெல்லாம் அவனைப் பற்றி மக்கள் அபிப்பிராயம் கொண்டிருந்தனர் 1 சாமு 16:18. அதிலே உண்மையில்லாமல் இல்லை.

கொடிய, பலமுள்ள மிருகங்களோடே போராடி வென்றிருக்கிறான் 1 சாமு 17, 34, 35. இலக்கிய அறிவுள்ளவன், கவிஞன், பாடகன் சங்கீதங்களில் பெரும் பகுதி அவரால் இயற்றப்பட்டது என்பதை நாம் அறிவோம். அவைகள் பொருள் ஆழமும், கேட்போர் உள்ளத்தை தொடுவதுமாக இருக்கிறதை ருசித்துப்பார்த்தவர்கள் ஒத்துக்கொள்கின்றனர். தேவன்மேல் அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளவன் **''என்னைச் சிங்கத்தின் கைக்கும், கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார்''** '(1 சாமு 17:37)' **நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடயத்தோடும் என்னிடத்தில் வருகிறாய், நானோ நீ நிந்திக்கிற இஸ்ரவேலருடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றைய தினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்'** (1 சாமு 17:46) போன்ற அவனுடைய நம்பிக்கை நிரம்பிய பேச்சுகளும், செயல்களும் அவனுக்கு தேவன் மேலிருந்த விசுவாசத்தைக் காட்டுகிறது.

பக்தி விஷயத்திலும் அவன் சிறந்தவனே **'வேதத்தை இரவும் பகலும் தியானிக்கிற மனுஷன் பாக்கியவான்'** என்று சொன்னவன் (சங் 1:1) **'ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபொழுது மகிழ்ச்சியாய் இருந்தேன்** என்றும் கூறுகிறான் (சங் 122:1). இன்னும் எத்தனை எத்தனையோ வசனங்கள் சங்கீதபுஸ்தகத்தில் அவனுடைய தேவ பக்திக்கு எடுத்துக் காட்டுகளாக இருக்கின்றன. மேலும் அவன் தன்னுடைய தவறுகளை தேவ மனுஷன் சுட்டிக்காட்டின பொழுது, உள்ளமுடைந்து கதறினான் (சங் 51). அவன் பாவத்திற்காக மெய்மனஸ்தாபப்பட்டு தேவ இரக்கத்தைப் பெற்றான். அதனாலே தான் வைத்தியர் லூக்கா; தன் இதயத்துக்

**கேற்றவனாகக் கண்டேன்** என்று தேவன் சாட்சி கொடுத்ததாக எழுதுகிறார் (அப் 13:22).

இவ்வளவு தாலந்துகளையும், ஆசீர்வாதங்களையும் பெற்றுப் பேரும் புகழுமாய் வாழ்ந்த இந்த மனுஷனுடைய குடும்ப வாழ்க்கையும், அவனுடைய பிள்ளை வளர்ப்பு முறைகளும் மிகவும் கண்டனத்துக்குரியதாக இருக்கிறது என்பதை நினைக்கும்போது மிகுந்த வருத்தம் உண்டாகிறது. தேவசித்தத்துக்கு விரோதமான எந்தப் பாவமும் அதற்குரிய விளைவுகளைச் சிறிதளவாவது நம்முடைய வாழ்க்கையில் பதிப்பிக்காமல் போகாது. ஒருவன் எவ்வளவு பெரிய மனிதனாக இருந்தாலும், தேவ கிருபையையும், ஆசீர்வாதத்தையும் பெற்றிருந்தாலும் பாவத்திற்குரிய விலையைக் கொடுத்தே தீரவேண்டும்; தேவன் பட்சபாதகமுள்ளவர் அல்ல என்பதை தாவீதின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்தால் எளிதில் விளங்கிக் கொள்ளலாம். பலதார முறை அக்காலத்தில் ஒரு பெரிய குற்றமாகக் கருதப்படவில்லை என்றாலும் அது தேவனுடைய தீர்மானத்துக்கு விரோதமானதே அவனுடைய மனைவிமார்களின் சண்டைகள் மனஸ்தாபங்களைப் பற்றி வேதாகமம் விவரித்துச் சொல்லவில்லையென்றாலும் அவனுடைய பிள்ளைகள் ஒருவருக்கொருவர் பகைமை உணர்வு உள்ளவர்களாக இருந்ததை வைத்துப் பார்க்கும்போது நிச்சயமாக அவர்களுடைய தாய்மார்களின் மனப்போக்கு அவர்களுடைய பகைமையை வளர்ப்பதற்குக் காரணங்களாக இருந்திருக்கும் என்று எவரும் ஊகிக்கலாம். போதாதற்கு தாவீது தன்னுடைய பிள்ளைகளுடைய தவறுகளைக் கடிந்துகொள்ளாமல் தங்கள் இஷ்டத்துக்கு வளரும்படி விட்டுவிட்டான் என்று தோன்றுகிறது. (1 ராஜா 1;6)

பிள்ளைகள், வேலிமுள் அல்ல-அவர்கள் வேப்பங்கன்றுகள். அவர்கள் வளரக்கூடாது, அவர்கள் வளர்க்கப்பட வேண்டும் என்று அனுபவஸ்தர் ஒருவர் கூறினார். வேதாகமமும் கூட பிள்ளை வளர்ப்பைப் பற்றி மௌனமாக இருக்கவில்லை. பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியில் அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான் (நீதி 22:6) பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக (எபே 64) என்று ஆலோசனை கூறுகிறது.

இவைகளையெல்லாம் தாவீது போன்ற மனிதர்கள் கூட அசட்டை செய்திருக்கிறார்கள் என்று நினைக்கும் போது நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது, இன்றைக்கும் கூட அநேக பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் செல்லம் கொடுப்பதாக எண்ணிக் கொண்டு பிள்ளைகளுடைய தவறுகளைக் கண்டிக்காதது மட்டு-

மல்ல அதைப் பார்த்து ரசித்து மகிழவும் செய்கிறார்கள். பெற்றோர்களே அதற்காக தாவீது கொடுத்த விலை என்ன என்று உங்களுக்குத் தெரியுமா?

தாவீதின் மூத்த மகன் அம்னோன். இவன் தாவீதுக்கு ஆகினோம் என்னும் ஸ்திரீயின் வழியாய்ப் பிறந்தவன் (2 ராஜா 3:2) தாவீதுக்கு மாக்காள் என்னும் வேறொரு மனைவியின் மூலமாக ஒரு பெண்பிள்ளை இருந்தாள் அவள் பெயர் தாமார். அவள் நல்ல அழகி இந்த அம்னோன் என்பவன் அந்தப் பெண்மீது சகோதரி என்றும் பாராமல் மோகம் கொண்டு கெடுத்துப் போட்டான் (2 சாமு 13:1-22). இந்த செய்தியைக் கேள்விப்பட்ட அவளுடைய அண்ணன் அப்சலோம் என்பவன் சுமார் இரண்டு ஆண்டுகளாக வன்மம் வைத்துக் கொண்டிருந்து அம்னோனை ஒரு நாளில் விருந்துக்கு அழைத்து அடித்துக் கொன்று போட்டு, தன் தாய் பிறந்த கேசூருக்கு ஓடிப்போனான் (2 சாமு 13:22-38).

இவைகள் எல்லாம் ஒரு வேளை தாவீது அந்நாட்களில் செய்த அக்கிரமச் செய்கைகளின் விளைவா? வேறொருவனின் மனைவியாகிய பெத்சேபாள் மீது மோகங்கொண்டு அவளைத் தொட்டதற்கு தேவன் கொடுத்த தண்டனையா? (2 சாமு 11:4) அப்சலோமை, தன்சகோதரனை சதி செய்து கொன்றதற்கு, தாவீது நாட்டுப் பற்று மிகுந்த போர் வீரன் உரியாவை தன் வசப்படுத்த முடியாததால் அவனைத் தீர்த்துக்கட்டுவதற்குச் செய்த சதியின் பிரதிபலிப்பா? (2 சாமு 11:14-25)

அப்சலோம் அதோடு நிற்காமல் தன் தகப்பனுக்கு விரோதமாய் கலகம் செய்து தானே ராஜா என்று பிரகடனம் செய்து கொண்டு தகப்பனாரை நாட்டை விட்டே துரத்திவிட்டான். அந்த நிகழ்ச்சியை 'தாவீது தன் முகத்தை மூடி வெறுங்காலால் நடந்து அழுதுகொண்டு ஒலிவ மலையின் மேல் ஏறிப்போனான்; அவனோடிருந்த சகல ஜனங்களும் முகத்தை மூடி அழுதுகொண்டு ஏறினார்கள்' என்று வேதாகமம் விவரிக்கிறது (2 சாமு 15-30) பின்னர் நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, ராஜ்ஜியத்தைத் திரும்பப் பெற்றுக் கொண்டான். ஆனால் தான் அருமையாய் நேசித்த மகன் அப்சலோமை இழந்தான். இவைகளை எல்லாம் கவனிக்கும்போது, நீதி உறங்கவில்லை என்று தான் நினைக்கத் தோன்றுகிறது, நிரபராதியாகிய உரியாவை சதிசெய்து கொன்று அவனுடைய மனைவியை எடுத்துக்கொண்டதற்காக நாத்தான் தீர்க்கதரிசி மூலமாக தேவன் கொடுத்த சாபம் என்ன? 'பட்டயம் உன் வீட்டைவிட்டு விலகாதிருக்கும்' 2 சாமு 1210. பெற்றோர்களே, உங்கள் குடும்பத்தில் சமாதானமும், மகிழ்ச்சியும், உங்கள் பிள்ளைகளிடத்தில் சகோதரபாசமும் இருக்கவேண்டும் என்று

விரும்புகிறீர்களா? அது நல்லது தான், தேவனுக்கு பயந்து பாவத்துக்கு விலகி நீதியை நடப்பியுங்கள். அநியாயத்தை விதைத்து விட்டு தீமையை அறுவடை செய்யமாட்டோம் என்பது எந்த வகை நியாயம்?

தாவீதின் இன்னொரு மகன் பெயர் அதோனியா. இவன் ஆகீத் என்னும் ஸ்திரீயின் வழியாகப் பிறந்தவன். (1நாளா 3:1-7) அப்சலோமின் மரணத்துக்குப் பிறகு தானே பட்டத்துக்கு உரிய இளவரசன் என்ற நினைப்பில் மிதந்து கொண்டு பல காரியங்களைச் செய்துவந்தான். தாவீது அதைக் கண்டுகொள்ளவில்லை (1 ராஜா 1:5-7) அவன் செய்து வந்த காரியங்களுக்கு எவ்வித ஆட்சேபனையும் ராஜாவிடத்திலிருந்து வரவில்லை என்று மக்களும் அதிகாரிகளும் கண்டபொழுது அவனைச்சார்ந்து நின்றார்கள். சமயம் வந்தபோது அவன் தன்னை ராஜா என்றே பிரகடனப் படுத்திவிட்டான் என்று தெரிகிறது (1 ராஜா 1:25) இத்தனை காரியங்களும் நடந்த பிறகு பெத்சேபாளும் நாத்தான் தீர்க்கதரிசியும் போய் ஞாபகப்படுத்தின பிறகு சாலமோனை ராஜாவாக ஏற்படுத்த உத்தரவிடுகிறார். பல மனைவிகள். பல இளவரசர்கள் இருக்கும்போது (1நாளா 3:1-7) இன்னார் தான் பட்டத்துக்குரியவர் என்று திட்டவட்டமாக அறிவித்து இருக்க வேண்டும். அப்படி அறிவித்தால் பிரச்சனைகள் உருவாகலாம் என்ற நிலை இருந்திருந்தால் அதை மிக முக்கியமானவர்களிடமாவது இரகசியமாகச் சொல்லி வைத்து மற்ற எவரும் ராஜாவின் எண்ணத்துக்கு மாறாக செயல்படாதபடி கண்காணித்திருக்க வேண்டுமல்லவா?

ஒரு சாம்ராஜ்யத்தை கட்டிக்காத்த தாவீதுக்குத் தன் குடும்பக் காரியங்களை முறைப்படுத்தாமற் போனதினால் ஏற்பட்ட குழப்பம் எவ்வளவு என்று பாருங்கள். அதோனியா தனக்கு ஏற்பட்ட மனக்கொதிப்பை அவனே வெளியிடுவதைக் கேளுங்கள். **''ராஜ்யம் என்னுடையதாயிருந்தது என்றும் நான் அரசாளுவதற்கு இஸ்ரவேலர் எல்லோரும் என்மேல் நோக்கமாய் இருந்தார்கள் என்றும் நீவீர் அறிவீர்; ஆனாலும் ராஜ்ய பாரம் என்னைவிட்டுத் தாண்டி என் சகோதரனுக்கு ஆயிற்று** என்கிறான்'' (1 ராஜா 2:75) சாலமோன் ராஜாவாக முடி சூடப்பட்டான் என்று கேள்விப்பட்டதும் அதோனியா தன் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று அஞ்சினான் (1 ராஜா 1:50) அவனுடைய பயத்துக்கு ஆதாரம் இல்லாமல் இல்லை. அவன் பயந்தபடியே ஒரு காரணம் கிடைத்ததும் சாலமோன் அவனைக் கொன்றுவிட்டான். (1ராஜா 2:25)

இந்த அளவு குடும்பங்களில் வெட்டும் குத்தும், சர்வ சாதாரண-மாகப் போனதுக்கு ஒரு வகையில் தாவீதின் மோசமான குடும்ப பரிபாலன் தான் காரணம் என்று துணிந்து கூறலாம். இந்த பதவி போட்டியில் ஏற்பட்ட ரசாபாசங்கள் நமக்கு விரித்துச் சொல்லப்படவில்லை. ஆயினும் சகோதரர்கள் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு சாகிற அளவுக்கு அவர்கள் உள்ளம் கடினப்பட்டது எப்படி?

பெற்றோர்களே! சிந்தியுங்கள் (1) பல மனைவிகள் (2) தாவீதின் மோக இச்சையால் குற்றமற்ற இரத்தம் சிந்தப்பட்டது. (3) பிள்ளைகள் வளர்க்கப்பட்ட முறையில் குறைபாடு (4) தெளிவான தூரப் பார்வயின்மை ஆகியவைகளே நாம் பெரிதும் மதிக்கிற தாவீது அரசனின் குடும்ப சூழ்நிலையைக் கெடுத்துப்போட்டது.

நண்பர்களே! முறிந்த கை கூடலாம் ஆனால் முன்பு இருந்த வலுவும் பொலிவும் இருக்குமா? என்பது சந்தேகமே. பாவம் செய்தவன் மனங்கசிந்து கண்ணீரோடு தேவனிடத்தில் மன்றாடினால் மன்னிப்புக் கிடைக்கும் என்பது சரியே. ஆனால் அதன் விளைவுகளை சிறிதளவாவது அனுபவிக்காமல் தப்ப முடியாது. சிறுவயதிலிருந்தே பாவத்தை எல்லா ரூபத்திலும், நிலைகளிலும் எதிர்த்துப் போராடி தன்னுடைய பரிசுத்தத்தைக் காத்துக்கொண்ட யோசேப்பையும், பல பாவங்களைச் செய்து பிறகு மனந்திரும்பிய தாவீதின் வாழ்க்கையையும் ஒப்பு நோக்கி பாருங்கள். தாவீது சிறுவயதிலே ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தாலும் அவனுடைய வாழ்க்கையின் பெரும் பகுதி சஞ்சலத்திலும், வேதனையிலும், போராட்டத்திலுமே கழிந்திருக்கிறது. ஆனால் யோசேப்பின் வாழ்க்கையோ தெளிந்த நீரோடை; ஆசீர்வாதத்தின் ஊற்றுக்கள். நீங்கள் யாராக இருக்க விரும்புகிறீர்கள்?

—E. Z. செல்வநாயகம்

## ரெபெக்காள்

முதிர் வயதில் பார்வை இழந்த ஈசாக்கின் மனைவி ரெபெக்காவுக்கு ஏசா, யாக்கோபு என்ற புத்திரர்கள். தான் அதிகமாக நேசிக்கும் இளையகுமாரன் யாக்கோபுவுக்கு தலைச்சன் (சிரேஷ்ட புத்திர) ஆசீரைப் பெற்றுத் தர தாயார் ரெபெக்கா தீட்டும் ஏமாற்றுத் திட்டத்தில் வீழ்ந்து போகிறார் ஈசாக்.

சகோதரிகளே, நம் குடும்பங்களில் பிள்ளைகள் ஒருவரை ஒருவர் ஏமாற்ற நாம் துணைபோகிறோமா? வேண்டாம் இந்த பிரிவினை வேலை!

சகோதரி மேரி போர்ஜியா
திண்டுக்கல்

# யாருக்குத் தெரியும்?

கல்லூரியில் பயின்று வந்த ஒரு கிறிஸ்தவ மாணவனை சோதனையில் வீழ்த்த சாத்தான் பலமுறை முயன்று வந்தான். என்றாலும் அம்மாணவன் சோதனைகள் யாவற்றையும் ஒதுக்கித் தள்ளிக் கொண்டே வந்தான். எப்படியாவது அவனை பாவச் சேற்றிலே அமுக்கிப்போடும் தீர்மானத்தில் சக மாணவர்களை பயன்படுத்தினான் சத்துரு சாத்தான். ''இந்தக் காரியத்தை நீ செய்தால் யாருக்குத் தெரியப் போகிறது? எங்களோடு சேர்ந்து மகிழ்ச்சியாக இருக்க வா'' என்று அவனை ஆசை வார்த்தைகள் கூறி அழைத்தான் ஒரு மாணவன்.

பட்டென்று பதிலளித்தான் அக்கிறிஸ்தவ மாணவன் : ''யாருக்குத் தெரியப்போகிறதா? ஏன்?..எனக்குத்தெரியும்; தேவனுக்குத்தெரியும்; எனது கிறிஸ்தவ நண்பர்களுக்கும் தெரியவரும், எல்லாவற்றிற்கும் மேலாக, கிறிஸ்து வருகையில் ஒவ்வொருவருக்கும் தெரிந்து விடும். நண்பர்களே! மன்னித்து விடுங்கள்; என்னை விட்டு விலகிப்போங்கள்''.

நல்ல பதில் !!! **யாருக்குத் தெரியும்?**

**எனக்குத்தெரியும் :** எவருக்கும் எக்காலத்திலும் தெரியாமல் போனாலும் கூட, பாவத்தை விரட்டியடிக்க இந்த ஒரு காரணமே போதும், என்னுடைய மனசாட்சியுடன், ஒரு நாளில் 24 மணி நேரமும் எவரும் வாழத்தேவையில்லை; ஆனால் நான் வாழுகிறேன்; எனவே, இரவில் மிகவும் தெளிவான மனசாட்சியுடன் படுக்கைக்குச் சென்று, காலையில் எவ்வித வெட்கமும் இன்றி கண்ணாடியில் என் முகத்தைப் பார்க்கக்கூடிய வகையில் நான் வாழ வேண்டியவனாக இருக்கிறேன்.

**தேவனுக்குத்தெரியும் :** ''நான் பாவஞ் செய்தால், அதை நீர் என்னிடத்தில் விசாரித்து, என் அக்கிரமத்தை என் மேல் சுமத்தாமல் விடீர்'' (யோபு 10:14) என யோபு கூறினார். சோதனையை நேருக்கு நேர் சந்தித்தான் யோசேப்பு. ஆனாலும் அதற்குப் பலியாக மறுத்து விட்டான். தனது வீட்டை விட்டு வெகு தூரத்தில் அவன் வசித்த போதிலும்; தேவனுக்கு நெருக்கமாக இருந்தான். ''....நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்'' (ஆதி 39:9) யோசேப்பு, ஆம் நண்பர்களே, அவர் பார்க்க முடியாதபடி நாம் எதையும் செய்யமுடியாது.

**எனது கிறிஸ்தவ நண்பர்களுக்குத் தெரியும்:** எனது குறிப்பிட்ட பாவத்தைப் பற்றி அவர்கள் அறியாமலிருக்கக்கூடும். ஆனால் எனது ஆவியின் அனலற்றத் தன்மையை உணரக்கூடுமே. சபையானது ஒரு சரீரம்; முழுச்சரீரத்திற்கும் தீங்கிழைக்காமல் ஒரு உறுப்பு மட்டும் தவறு செய்ய இயலாது.

**கிறிஸ்து வருகையில் எல்லோருக்கும் தெரிய வருமே?:** ''....இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்'' (1கொரி 4:5).

இன்று நான் பாவம் செய்தால் நாளை அதற்குறிய தண்டனையைக் கட்டாயம் அனுபவிக்க வேண்டியதாயிருக்கும்.

**ஜோ பார்னெட்** **S.S. ராஜன்**

(27ம் பக்கத் தொடர்ச்சி)

விட்டால் போதும் என்று நீ கதறுவாய். அந்தோ பரிதாபம் உன்னைக் கெட்டியாக பிடித்துக் கொள்வதால் ஆற்றோடு அடித்துச் செல்லப்பட்டு மரணமடைவாய். நெருப்போடு விளையாட வேண்டாம்.

இன்றே தேவ வார்த்தையைக் கேள்! ஆழ்ந்து சிந்தி! உடனே செயல்படு. இன்றே இரட்சண்ய நாள். இப்பொழுதே அனுக்கிரக காலம். உன் உயிர் எப்போது எடுத்துக் கொள்ளப்படும் என்பதும் கர்த்தர் மீண்டும் எப்போது வருவார்? என்பதும் அறியப்படாத இரகசியம் ஆகையால் தாமதியாதே.

**E.Z. செலவநாயகம்**

# கிறிஸ்து கற்பித்த சமத்துவம் காப்போம்!

**"நீங்களோ 'ரபீ' என்றழைக்கப் படாதிருங்கள். கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார்; நீங்கள் எல்லாரும் சகோதரர்களாயிருக்கிறீர்கள். பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள், பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார். நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள், கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாக இருக்கிறார். உங்களில் பெரியவனாயிருக்கிறவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக் கடவன்"** என்று இயேசு தம்மைப் பின்பற்றியவர்களுக்கு அறிவுரை கூறினார். (மத் 23:8—11)

ஆனால் நாம் இன்று காண்பது என்ன? இயேசுவானவர் எவைகளை வேண்டாம் என்று தடை விதித்தாரோ அவைகளை நாங்களும் அவரைப் பின்பற்றுகிறோம் என்று கூறுகிற மக்களே மீறிச் செயல்பட்டுக்கொண்டு வருகிறதைப் பார்க்கிறோம். தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அவரை வாழ்க்கையால் மறுதலிக்கிற இந்த மனிதர்கள் அவைகளைப் பற்றி வருத்தப்படவாவது செய்கிறார்களா என்றால் இல்லை என்றே தோன்றுகிறது.

யூத மார்க்கத்தில் உயர்வு தாழ்வுகள் ஒழுங்கு முறைகள், வகுப்பு வித்தியாசங்கள் இருந்தன. ஆசாரியர், லேவியர், சாதாரண மக்கள் என்ற பாகுபாடுகள் இருந்தன. அதே போன்று மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சமயங்களிலும் ஆசாரியத்துவ முறை (குருக்கள்) சாதாரண மக்கள் என்ற பாகுபாடு நிலவுகிறது.

மனிதர்கள் அதிகாரத்துக்கும் ஆட்சிக்கும் ஆசைப் படுகிற இயல்புகளை உடையவர்கள். தங்களுடனே வாழும் சக மனிதர்களிடமிருந்து மாலை மரியாதைகளை எதிர்பார்க்கின்றனர். அது நமக்குப் புரிகிறது. ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிற கூட்டத்தாரும், கிறிஸ்து வேண்டாம் என்று தள்ளின இவ்வேற்றுமை உணர்வுகளை ஊக்குவிக்கும் முறைகளைக் கூசாமல் பின்பற்றி உலகப் பிரகாரமாக ஒரு தலைவர், ஒரு தலைமை ஸ்தலம், குருமார்களுக்குள்ளேயே ஏற்றத் தாழ்வு போன்றவைகளை உண்டாக்கி தலைவராயிருப்பவர்களுக்கு மற்றவர்கள் எல்லாரும் பணிந்து நடக்குமாறு செய்து திருப்தியடைகின்றனர். இவைகள் மனிதர்களைப் பிரித்துவைத்து, சமத்துவ உணர்வைக் கொல்லுகின்றன. வேறுபடுத்திக் காட்டுகின்றன. ஒருவரை மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பித்துக் காட்டுகின்றன.

இயேசுபெருமான் தானே முன்மாதிரியாக வாழ்ந்து காட்டி, மக்களுக்கு வகுத்தருளியுள்ள முழு நிறைவான நலம் பயக்கும் சமத்துவக் கோட்பாட்டிற்கும், மனிதத் தலைவர்களால் தோற்றுவிக்கப்பட்டு ஒரு மனிதனை மற்றவர்களைக் காட்டிலும் சிறப்பிக்கிற சமய சித்தாந்தக் கோட்பாட்டுக்கும் உள்ள வேறுபாட்டை ஒப்பு நோக்கிப் பாருங்கள். இயேசுவின் சிந்தனை யோட்டத்திற்கும், குறிக்கோள் இலக்கணத்திற்கும் இவைகள் எல்லாம் எவ்வளவு முரணானவைகள் என்பது எளிதில் நமக்கு விளங்கும்.

கிறிஸ்தவ சமுதாயம் என்பது ஒரு குடும்பம். அதிலே அடிமைகளும் ஆண்டான்களும் இல்லை. சிறப்பு வணக்கத்துக்குரியவர்களும் இல்லை. மற்றவர்கள் மீது அதிகாரம் செலுத்தி ஆளுவதற்கு ஒருவருக்கும் உரிமை இல்லை. கடவுளின் நேரடி அன்பின் கீழும், பராமரிப்பின் கீழும் எல்லா மனிதர்களும் சம உரிமையுள்ளவர்களாக இருக்கிறோம்.

கடவுள் முன்னிலையில் ஒருவர் மற்றவர்களை விடப் பெரியவர் அல்லர். கடவுளின் கிருபை, ஆசீர்வாதங்கள் ஆகியவற்றைப் பெறுவதிலும் மனிதர் ஒருவரைவிட மற்றொருவர் சிறப்புச் சலுகை பெற்றவர் அல்லர். கிறிஸ்தவ உறவு முறையிலும் ஒருவர் மற்றவரைவிட பெரியவராக இருக்க இடமில்லை; இருக்க விரும்பவும் கூடாது. ஊழியம் செய்வதில் வேண்டுமானால் ஒருவர் மற்றவரை விட அதிகமாக ஊழியம் செய்யலாம்; ஊழியத்திலே ஒருவர் பெரியவராக இருக்கலாம்.

எல்லோரும் மூத்த சகோதரராகிய இயேசு கிறிஸ்துவின் அதிகாரத்தின் கீழ் இருக்கிறோம். அவர் மூலமாய் பிதாவினிடத்தில் சேருவதற்கு எல்லா மனிதருக்கும் சம உரிமை உண்டு. இயேசு கிறிஸ்துவே 'நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியமாயிருக்கிறவர்' (எபி 3:1) அவருக்குக் கீழ் எல்லோரும் சம அந்தஸ்து உள்ள ஆசாரியர்களே. (1 பேதுரு 2:9 5:1) எந்த மனிதனுக்கும், தன் சகோதரனுக்கும் கடவுளின் சிங்காசனத்துக்கும் மத்தியில் நின்று தன் சகோதரனுக்கு ஓர் ஆசீர் வாதத்தைப் பெற்றுத் தருவதற்கோ அல்லது அதனை மறுப்பதற்கோ அதிகாரமும் இல்லை; உரிமையுமில்லை. ஆவிக்குரிய எல்லா வாய்ப்புகளும் ஆசீர்வாதங்களும் குடும்பத்தலைவரின் அதிகாரத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு அங்கத்தினரும், அவர் அளவிலேயே அவருக்குத் திறந்துவிடப்பட்டுள்ள 'புதியதும் உயிருள்ளதுமான வழியின் மூலம் அதனிடம் செல்வதற்கு கட்டுப்பாடில்லாத உரிமையுண்டு'. (எபி 10:19-23)

கிறிஸ்துவுக்குள்ளான தன் சகோதரர்களுக்கும், கடவுளின் சிங்காசனத்திற்கும் இடையில் எந்த ஒரு மனிதனும் தன்னை

நிறுத்திக் கொண்டு தன் மூலமாக கடவுளிடம் தன் சகோதரர்களுக்கு நன்மை பெற்றுத் தர முயல்வது இயேசுகிறிஸ்துவின் போதனைக்கு முரணானது. கடவுளின் ஆசீர்வாதத்தைப் பகிர்ந்தளிப்பதற்கு ஒரு ஸ்பெஷல் ரக மனிதர்கள் தங்களைத் தாங்களே மொத்த ஏஜெண்டுகளாக நியமித்துக் கொள்வது எவ்வளவு நாகரீகமற்ற செயல்! கிறிஸ்து தமது அனைத்துச் சகோதரர்களும் பெற்று அனுபவிக்குமாறு தமது சொந்த இரத்தத்தைச் சிந்தி அருளிச் செய்துள்ள விலை மதிப்பிட முடியாத உரிமைகளையும், வாய்ப்புகளையும் இடைத்தரகர் போன்ற இந்தப் போலி மனிதர்கள் தம் கையில் எடுத்துக் கொண்டு விலை கூறுவதற்கும், விநியோகிப்பதற்கும் அனுமதிப்பது எவ்வளவு அறியாமை!

**நீங்கள் எல்லோரும் சகோதரர்களே** *(மத் 23:8)* இதுவே கிறிஸ்து நமக்கு அளித்துள்ள உரிமைப் பத்திரம்: இக் கிறிஸ்தவ ஜனநாயகம் எல்லா விதத்திலும் காப்பாற்றப்பட வேண்டும். சகோதரர்களுக்குள்ளே உயர்வு, தாழ்வு, வேற்றுமைகளைக் கற்பிக்கும் எந்த முயற்சியும் தகர்த்தெறியப் படவேண்டும். கிறிஸ்தவர்களுக்கு அவர்களின் ஒரே தலைவராகிய கிறிஸ்து வழங்கின பொருள் செறிந்ததும், முழுமையும், எளிமையும் நிறைந்த உரிமைகள், வாய்ப்புகள் பாதுகாக்கப் பட வேண்டும். இயேசுவே வேண்டாம் என்று ஒதுக்கிய ஆசாரியத்துவ முறையைப் புகுத்தி மெய்க் கிறிஸ்துவத்தின் தூய்மையை மாசுபடுத்தும் எவ்வித முயற்சியையும் அனுமதிக்கக் கூடாது. அப்படி அனுமதித்தால் அன்றே ஒரு சில சகோதரர்களை 'ரபீ' என்றும் 'பிதா' என்றும் 'போதகர்' என்றும் அழைக்குமாறு கட்டாயப்படுத்துகிறார்கள். இவர்களில் பெரியவர்களாயிருப்பவர்கள் மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு பதிலாக தங்களுக்கு ஊழியம் செய்ய மற்றவர்களை க்ர்ப்பந்திக்கிலாகள்

இத்தொடர் கொடுமைகளை எதிர்த்துக் கொதித்தெழுந்த சில நல்லவர்களின் முயற்சியால் இக் கோணலாட்சி முறைகள் அவ்வப்ோாருது அம்பப்படுத்தப்பட்டு தடுக்கப்பட்டதுண்டு, ஆனால் சிறிது காலம் சென்றபின் மீண்டும் சாத்தான் அவர்களை வஞ்சித்து விடுவான். அந்த பழைய கோணலாட்சி வேறு ரூபத்தில் துளிர்விடும், மீண்டும் குழப்பம், புதிய பெயரில் ஆதிக்கம் வளரும் கள்ளப் போதகங்கள் உள் நுழையும்.

சகோதரர்களே! இருபதாம் நூற்றாண்டு பல சாதனைகளைச் செய்து புகல் பெற்று விளங்குகிறது. மார்க்க விஷயத்திலும் ஒரு நல்ல முயற்சியை நாம் ஏன் தொடங்கக்கூடாது? நாம் செய்ய வேண்டியது அப்படியொன்றும் பெரிய புரட்சியில்லை; புதுமையுமில்லை: ஏழ்கனவே பலர் நமக்கு முன்னோடிகளாக நடந்து

காட்டிய பாதையில் நடைபோட வேண்டியது தான் 'மனோ-வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு காரியங்கள் இப்படி இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்த பெரேயா பட்டணத் தாரைப் போல' (அப் 17:11) வேதாகமத்தைக் கவனமாய் ஜெப சிந்தனையுடன் படித்து கிறிஸ்துவின் போதனைகளைக் கீறாமல், கிழியாமல், கூட்டாமல், குறைக்காமல் பின்பற்றுவோம்! எவ்வளவு பெரியமனிதராக இருந்தாலும் சரி, எவ்வளவு உயர்மட்டக் குழுவா யிருந்தாலும் சரி, வேதாகம அடிப்படை, ஆதாரம், அங்கீகாரம் இல்லாமல் போடும் எந்தத் தீர்மானத்தையும், உத்தரவுகளையும் புறக்கணிப்போம்.

நினைவிருக்கட்டும், வானத்திலும், பூமியிலும் சகல அதி-காரமும் உள்ள ஒரே தலைவர் இயேசுகிறிஸ்து மத் 20;18. அவர் இயற்றிய சட்டங்களை, அவர் போதித்த உயர் நெறிகளை, மாற்றவும், கூட்டவும் குறைக்கவும் எந்த ஒரு மனிதனுக்கும், குழுவுக்கும் அதிகாரமும், உரிமையுமில்லை.

**E. Z. செல்வநாயகம்**

(28ம் பக்கத் தொடர்ச்சி)

தேவைதானா என்றும் இச் செலவு அவசியமானதா என்றும் நம்-மையே கேட்டு, தெளிந்த புத்தியுடன் முடிவெடுக்க வேண்டும்.

கடன்களை சரியான காலத்தில் திருப்பிச் செலுத்தாமல் இருப்பது தேவனுடைய சபைக்கும் அவருடைய பெயருக்கும் நேரடிப் பாதிப்பை ஏற்படுத்துகிறது. தேவனைப் பற்றியும், அவ-ருடைய சபையைப் பற்றியும், எல்லா கிறிஸ்தவர்களைப் பற்றி-யும் மக்களுக்கு ஏற்படும் அபிப்ராயங்கள் அத்தனையும், **நாம்** எவ்வாறு வாழ்கிறோம் என்பதை அவர்கள் கவனிப்பதாலேயே ஏற்படுகின்றன. சபைக்கு அவமானமும், குற்றச் சாட்டும் கொண்டு வரும் காரியம் ஏதாவது இருப்பின், அது சில சபை அங்கத்தினர் களின் நேர்மையற்ற செயல்களே. நமது கடன்களை செலுத்து-வதில் நாம் நேர்மையாகவும் ஒழுக்கத்துடனும் நடந்துகொண்டால் தேவன் மகிமைப்படுத்தப்படுகிறார்.

**''ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூருகிற கடனே-யல்லாமல், மற்றொன்றிலும் ஒருவனுக்கும் கடன்படா-திருங்கள்''** (ரோமர் 13:8)

நேர்மையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய கடமை ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் உண்டு.

**ரோனி, ஏ. மிஸில்டின்** S.S **ராஜன்**

# கேளுங்கள்! சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!

ஆவியானவர் சபைக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன் என்று வெளிப்படுத்தின விசேஷம் பல இடங்களில் எச்சரித்துப் புத்தி சொல்கிறது (வெளி 2:7, 11, 16, 29, 3:6,13, 22:13:9). ஏன் அப்படி கூறுகிறது? ஏனெனில் வேதாகமத்தைப் படிக்கிற மக்கள் ஒன்றுபோல அதை புரிந்து கொண்டு, அதற்கு கீழ்ப் படிவதில்லை. உதாரணத்துக்கு சில: எசே 33:30, 31–ல் **'உனக்கு முன்பாக என் ஜனங்கள் போல் உட்கார்ந்து உன்வார்த்தைகளைக் கேட்கிறார்கள். ஆனாலும் அவர்கள் அவைகளின்படி செய்கிறதில்லை. அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள். அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது'** என்று அவர்கள் மாயத்தை சாடுகிறார், பெந்தேகோஸ்தே நாளில் அப்போஸ்தலன் பேதுருவின் உருக்கமான முதல் ஏற்செய்திப் பிரகடனத்தைத் திரளான மக்கள் கேட்டு பிரமிப்பு அடைந்தனர். ஆனால் மூவாயிரம் பேர் மட்டுமே இருதயத்தில் குத்தப்பட்டு, தாங்கள் என்னச் செய்ய வேண்டுமென்று கேட்டு அறிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். (அப் 2:5-12;37, 41.) பெரும்பான்மையானோர் கேட்டதோடு சரி, செயல்படவில்லை

இதை விட கொடுமை ஸ்தேவானின் உரையைக் கேட்ட மக்கள் செய்த காரியம். அவர்கள் கீழ்ப்படியாததுமட்டுமல்ல, மூர்க்கமடைந்து, அவனைப்பார்த்துப் பல்லைக்கடித்துக் கல்லெறிந்து கொன்றே விட்டார்கள். (அப் 7:54,57, 60), அத்தேனே பட்டணத்தில் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே உலக இரட்சகர் என்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உரையொன்றை நிகழ்ந்தினார் பவுல். ஆனால் தாங்கள் மெத்தப் படித்தவர்கள் என்ற மமதையால் சிலர் அவரை இகழ்ந்தனர். வேறு சிலர் நீ சொல்வதை இன்னொரு நாளைக்கு கேட்போம் என்று ஈரங்கி வைத்தார்கள். ஒரு சிலர் மட்டுமே அவரைப் பற்றிக் கொண்டு விசுவாசிக்கலானார்கள் அப் 17:34.

ஆம், சகோதரர்களே, சூரிய வெளிச்சமும், உஷ்ணமும், அறுத்து வைக்கப்பட்டுள்ள சுடாத செங்கல்லின் மீதும் பனிக்கட்டி மீதும் ஒரே விதமாகப் பாய்ந்தாலும் அப் பொருட்களின் தன்மைகளில் வித்தியாசமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. செங்கல் இறுகுகிறது; பனிக்கட்டி உருகுகிறது. அதே போன்று சொல்லப்படுகிற வசனங்கள் ஒரே மாதிரியாக இருந்த போதிலும், வசனங்களை கேட்கிற உள்ளங்கள் வித்தியாசமாக இருக்கின்றன என்று இயேசு, தமது விதைக்கிறவன் உவமையிலே சொல்லுகிறார்(மத் 13:15-23;

லூர்க் 8:12, 15,18.) அவர் கேட்கிற மக்களின் இதயங்களை நான்கு வகையாகப் பிரிக்கிறார்.

**முதலாவது வகை;** எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்கள். பாலஸ்தீனா நாட்டின் வயல் வெளிகளில் மக்கள் நடந்து செல்வதற்கு ஒற்றையடிபாதை இருக்கும். அதில் மக்கள் நடந்து மிதிப்பதால் இறுகிபோயிருக்கும். விதைக்கும் போது அதன் மீது விழுகிற விதைகள் ஏர் உழவுக்கு சிக்காமல் மேலேயே கிடக்கும். ஆகாயத்து பறவைகளின் கண்களில்அது சீக்கிரமாய்த் தென்படுவதால் அவைகள் அவைகளை பொறுக்கிச் சாப்பிட்டுவிடும். ஆகையால் அது முளைப்பதற்கே வாய்ப்பில்லை. வளர்வது கனி கொடுப்பது என்பது பற்றிய பேச்சுக்கே இடமில்லை அதைப் போன்று சிலருடைய இருதயங்களில் கர்த்தருடைய வார்த்-கள் போய்ச் சேருவதில்லை. ஒரு காதில் கேட்டு மறு காதில் விட்டு விடுகின்றனர். மத்தேயு, இப்படிப்பட்ட மக்களின் நிலையை விளக்க ஏசாயா மற்றும் எசேக்கியேல் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகளை மேற்கோள் காட்டிக் கடிந்துகொள்ளுகிறார். (ஏசாயா 6:9, 10; எசே 12:2)

**இரண்டாம் வகை:** ஆழமான வேர் இல்லாத செடியைப் போன்றவர்கள் (லூக் 8:13) பாலஸ்தீனா நாட்டில் சுண்ணாம்பு பாறைகள் அதிகம், அதன் மேற்பகுதியில் மழை, காற்று ஆகியவைகளால் கொண்டு வரப்பட்ட சொற்ப மண்ணே படிந்திருக்கும். அவைகளின் மீது விழும் விதைகள் முளைத்து வேரூன்றி கனி கொடுக்க கூடிய அளவு மண் ஆழமாக இருக்காது. அதனால் அவைகள் சீக்கிரமாக வாடி உலர்ந்து போகும். அதைப் போன்று சிலர் வசனத்தை ஆர்வத்தோடு கேட்பார்கள், உற்சாகமாக ஏற்றுக் கொள்வார்கள் ஆனால், உறுதியாக பிடித்துக்கொள்ளமுடியாமல் தடுமாறுவார்கள். சோதனைகள் வரும்போது தாக்குப் பிடிக்க முடியாமல் துவண்டுபோவார்கள்.

லூக்கா சோதனை என்று குறிப்பிடுகிற இந்த நிலையை மத்தேயு ''உபத்திரவங்கள் என்று குறிப்பிடுகிறார். (மத் 13:21) ஆகவே சத்தியத்தை ஏற்றுக் கொண்டு அதில் நிலைத்திருப்பது என்பது ஆழமான உறுதியான வேர்கள் உள்ள செடிகள் அல்லது மரங்களுக்குச் சமம். உபத்திரவங்கள், துன்பங்கள், சோதனைகள் என்று பலதரப்பட்ட எதிர்மறையான சூழல்கள், இகழ்ச்சிகள் இழப்புகள் விசுவாசிகளுக்கு ஏற்படும்போது அவைகளைத் தாங்கி நிற்கும் மனஉறுதி வேண்டும். அப்போஸ்தலன் பவுல், இதை 'அன்பில் வேரூன்றுதல்' என்று வர்ணிக்கிறார் (எபே 3:17) அவர் கொலோசேயருக்கு அறிவுரை கூறும்போது ''நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபடியே அவருக்குள் வேர் கொண்ட-

வர்களாகவும் அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்ட படியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக'' என்கிறார் (கொலே 2:6,7). மேற்கூறிய வசனங்கள் நமக்கு உணர்த்துகிற காரியம் தேவனுடைய வார்த்தைகளை நாம் படித்துத் தெரிந்து கொள்வதோடு நிறுத்திக் கொள்ளாமல் அதைத் தியானித்து ஏற்றுக்கொண்டு வாழ்க்கையில் கடைப்பிடிப்பதில் உறுதியாக இருக்கவேண்டும் என்பதாகும் (யாக் 1:22)

**மூன்றாவது வகை :** எதிர்த்துப் போராட முடியாத ஒரு நிலையைக் குறிக்கிறது (லூக் 8:14). சில நிலங்கள் செழிப்புள்ளதாக இருக்கும். ஆனால் களைகள் நீக்கப்படாமலும், சரியாகப் பண்படுத்தப்படாமலும் இருக்கும்போதே விதைகள் விதைக்கப்பட்டுவிடும். விதை முளைத்து வளரும்போது கூடவே களைகளும் வளர்ந்து, பயிர்களை வளரவிடாமலும், வளர்ந்தாலும் கனி கொடுக்க முடியாமலும் இடைஞ்சல் உண்டாக்கும். அது போன்று சிலருடைய இதயங்களில் குடிகொண்டிருக்கும் பாவ இயல்புகள் கர்த்தருடைய வசனங்கள் கிரியை செய்ய முடியாதபடி தடுத்துப் போடுகின்றன. அந்த தடங்கல்கள் மூன்று வகையானது என்று இயேசு இந்த உவமையில் குறிப்பிடுகிறார்.

**(அ) உலகக்கவலை :** (1 பேதுரு 5:7) ஐஸ்வரிய மயக்கம் (மத் 6:19) உலக உல்லாசம் (பிலி 3:19; 1 தீமோ 5:6, 2 தீமோ 3:4 **'மாமிசமும் மனதும் விரும்பினவைகளைச் செய்கிறார்கள்** என்றும்,' **'அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்கள்'** என்றும் வேதாகமம் இப்படிப் பட்டவர்களை வர்ணிக்கிறது (எபே 2:1-3). மெய்க் கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட இச்சைகளை வெறுத்து, இவ்விதமான இயல்புகளிலிருந்து தப்பி நடக்கவேண்டும் (1 யோவான் 2:16).

**நான்காவது வகை :** இதயத்தில் வசனத்தை ஏற்றுக் கொண்டு கனி கொடுக்கிற நிலைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது (லூக் 8:15) பாலஸ்தீனா நாட்டில் சமவெளிப் பகுதிகளும் உண்டு. அவைகளில் ஆண்டு முழுவதும் தருணத்துக்கேற்ற வேளாண்மைகள் செய்து கொண்டிருக்கிறபடியால் களைகள் நீக்கப்பட்டு பண்பட்டிருக்கும். அதைப் போன்று நல்ல இதயங்களில் சொல்லப்படுகிற சத்தியம் ஸ்திரமாக வேர் ஊன்றி எதிர்ப்பார்க்கிற நல்ல பலனைக் கொடுக்கும். ''நான் வந்து உங்களைக் கண்டாலும், நான் வராமலிருந்தாலும், நீங்கள் ஒரே ஆவியில் உறுதியாய் நின்று ஒரே ஆத்மாவினாலே சுவிசேஷத்தின் விசுவாசத்துக்காகப் போராடி எதிர்க்கிறவர்களால் ஒன்றிலும் மருளாதிருக்கிறீர்கள் என்று உங்களைக் குறித்து நான் கேள்விப்படும்படி எவ்விதத்திலும் நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்துக்குப் பாத்திரமாக மாத்திரம் நடந்து கொள்ளுங்கள் (பிலி 1:27) என்ற பவுலின் அறிவுரையின் படியும் எபி 12:1 கூறுகிறபடி பொறுமைசாலிகளாகவும் இருக்கிற மக்கள் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்.

முதலில் சொல்லப்பட்ட மூன்று இதயங்களைக் காட்டிலும் நான்காவதாகச் சொல்லப்பட்ட இதயம் எப்படி வித்யாசப்படுகிறது என்று கவனியுங்கள். (அ) உண்மையும் உத்தமமுமான இதயம்

ஏனோதானோவென்று கேட்கிற இதயத்தைவிட வித்தியாசமாயிருக்கிறது (ஆ) முதலில் ஆர்வத்தோடு கேட்டு சோதனைகளும், உபத்திரவங்களும் வரும்போது பின்வாங்கிப்போகிற இதயத்தை விட வித்தியாசமாக இருக்கிறது (இ) முட்கள் களைகள் ஆகிய உலகக் கவலைகளாலும் ஐஸ்வரியத்தின் மயக்கத்தினாலும் நெருக்கப்பட்டு கனிகொடுக்கமுடியாத நிலையைக் காட்டிலும் வித்தியாசமாக இருக்கிறது.

இந்த உவமை நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது?

(1) கிறிஸ்தவனாவதற்குத் தேவையான முதல் காரியம் விசுவாசம் (மாற்கு 10:10; யோவான் 9:24; அப் 2:38; அப் 8:37; 16:31)

(2) மனம் திரும்பவேண்டும் அதாவது நம்முடைய பாவ நிலைக்காக மெய்மனஸ்தாபப்பட்டு அவ்வழிகளை வெறுத்து ஒதுக்கி ஒரு புதிய வாழ்க்கையை துவங்குவதற்கான தீர்மானத்துக்கு வரவேண்டும் (லூக் 15:16.30 ; 13:3 அப் 2:38; 3:19;17:30,

(3) பின்னர் பாவங்கள் போகத் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும். (அப் 2:38; அப் 22:15; 1பேது 3:21.) தவறான போதகங்களைக் கேட்டு மனதைக் கடினப்படுத்திக் கொள்ளுதல். சொல்லுகிறவனுடைய தகுதியை எடைபோட்டுக் கொண்டு தேவனுடைய வசனத்தின் கருத்தாழத்தை அசட்டை செய்தல், உலக உல்லாசத்தின் பிடியிலிருந்து விலகிக்கொள்ள மனமில்லாமல் தங்களுடைய தவறான போக்கையும், நிலையையும் கண்டு கொள்ளாமை, தங்களுடைய போலி பக்தியை அங்கீகரித்து ஆறுதல் கூறும் கள்ளப் போதகர்களைச் சார்ந்துகொண்டு சத்தியத்தைக் கேட்டும் கீழ்ப்படிய மனமில்லாத நிலை ஆகியவைகள் நம்முடைய ஆத்துமாவை நரகத்துக்கு இழுத்துச் செல்லும் என்பதை உணரவேண்டும்.

அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இந்த உவமையைப் பொருத்திப் பாருங்கள். கிறிஸ்தவர்கள் தீமையை வெறுத்து ஒதுக்கவேண்டும்.(ரோமர் 12:9.)பாவம்என்பது ரசித்துமகிழஉதவும் விளையாட்டுப் பொருள் அல்ல. விளக்கின் ஒளியில் மயங்கிச் சுற்றிச் சுற்றி வந்து இறுதியில் மாண்டு போகும் விட்டில் பூச்சியை நினைத்துக் கொள்ளுங்கள். பாவம் என்பது மடியில் வைத்துக் கொஞ்சுவதற்கு ஏற்ற பூனைக்குட்டி போன்ற மனதுக்கு சுகம் தரும் சாதுவான பிராணி அல்ல. கொஞ்சம் ஏமாந்தால் குரல்வளையைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து ஆத்துமாவை சேதப்படுத்தி பிசாசுக்கும் அவனுடைய ஆட்களுக்கும் ஆயத்தம் செய்து வைக்கப்பட்டிருக்கும் நரகத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கும் கொடிய விலங்கு. ஆகவே ஒரு கிறிஸ்தவன் தீமையாகத் தோன்றும் எல்லாவற்றிற்கும் விலகியிருக்க வேண்டும் என்று எச்சரிக்கப் படுகிறான் (1 தெச 5:22) ஆகவே அது நம்மை மீறி என்ன செய்து விடும்? கொஞ்சம் சுவைத்துவிட்டு பின்னர் விட்டுவிடலாம் என்ற எண்ணம் கூடவே கூடாது. கம்பளி போனால் போகட்டும் கையை

(19ம்—பக்கம் பார்க்கவும்)

# நேர்மையே உன் விலை என்ன?

இன்றைய நாளில் நமது சமுதாயத்திலிருந்து வெகு வேகமாக மறைந்துகொண்டு போகும் நேர்மை என்னும் குணம், வேதாகமத்தில் கூறப்படும் சிறந்த நற்பண்புகளில் ஒன்றாகும். மோசடியான வியாபார நடவடிக்கைகள், பொய்கள், நம்பிக்கை துரோகம் ஒப்பந்த மீறல்கள், சிறு சிறு திருட்டு வேலைகள், கடைக்காரன் கண் அசந்தால் களவாடிச் செல்லும் தீய பழக்கம் போன்ற யாவும் இன்று சர்வ சாதாரணமாக, பரவலாக நடைமுறைக்கு வந்துள்ளன. இத்தகைய காரியங்களைச் 'சிறப்பாகச்' செய்ய வியாபாரத் 'திட்டம்' தீட்டிப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது!

ஆனால் இத்தீய குணங்கள் ஒரு மனிதனிடம் இருக்கக் கூடாது. ஒரு கிறிஸ்தவனுடைய வாழ்விலோ இக்குணங்களில் எதுவுமே இடம் பெறலாகாது. இது பற்றி மிகத் தெளிவாக வேதாகமம் போதிப்பதைப் பார்க்காம்: **''எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்''** (ரோமர் 12:17), **''அன்றியும் பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்; திருடுகிறவன் இனி திருடாமல்,.... தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக் கடவன்''** (எப. 4:25 28). நமது கடன்களைச் செலுத்தும் பொறுப்பு பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். இது முற்றிலும் நேர்மை சம்பந்தப்பட்ட காரியம். கடன்களை செலுத்தத் தவறுவது நேர்மையற்ற செயல். கடன் பத்திரங்களை எழுதிக் கொடுக்கும்போது, குறிப்பிட்ட நாளில் திருப்பித் தருவதாக வாக்களிக்கிறோம். அவ்வாறு குறிப்பிட்ட காலத்தில் பணத்தைச் செலுத்தத் தவறுவது ஒப்பந்த மீறலும், நேர்மையினின்று வழுவுதலும் ஒரு பொய்யும் ஆகும்.

தவிர்க்க முடியாத எதிர்பாராத சந்தர்ப்பங்களில் திடீரென எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டு, கடன்களைத் திருப்பித்தர முடியாமற் போய் விடுவதும் உண்டு. அப்படிப்பட்ட சமயங்களில் நமக்குக் கடன் தந்தவர்களை உடனே சந்தித்து, நிலைமையை விளக்கி, காரியங்களைச் சரிசெய்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியம். என்றபோதிலும், பல சமயங்களில் அவசிய செலவுகளை விட அநாவசிய அதிகச் செலவுகளே நம்மை சிக்கலில் மாட்டி வைத்து நேர்மைக்கு சவால் விடுகின்றன. நாம் விரும்பும் பொருளை அடையவோ, அல்லது தேவையென நாம் கருதும் பொருளுக்காகவோ அதிகம் செலவுகளைச் செய்துவிட்டு, பொருளாதார நெருக்கடியில் சிக்கிக்கொள்கிறோம். இக்காரியங்களில், இப்பொருள்


23ம் பக்கம் பார்க்கவும்

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridays-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

## திருமறை ஆசான் அன்புடன் அழைக்கிறது

ஜெபியுங்கள் !  பங்கு கொள்ளுங்கள் !

*நிகழ்வு* : திருமறை ஆசான் வாசகர் கருத்தரங்கம்

*நாள்* : 23.5.1992 சனிக்கிழமை

*நேரம்* : காலை 9-30மணிமுதல் மாலை 6 மணிவரை

*இடம்* : E.L.M. பெப்ரிஸியஸ் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி கலையரங்கம்,
புரசைவாக்கம், சென்னை - 600007.

*பொருள்* : திருமறை வழியில் ஒற்றுமை

*அனுமதி இலவசம் !*  *அனைவரும் வாரீர் !*

பி.கு. வெளியூரிலிருந்து 22-5-92 வெள்ளி இரவில் வருபவர்களுக்கு பள்ளியிலேயே தங்க வசதி செய்யப் பட்டிருக்கிறது.

**ஆசிரியர்**

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
PostBox No: 58 ERODE-638 001.